**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 1, Issue 2, May 2021** **E-ISSN: 2583-0880**

# சோழர்காலக் கல்வெட்டுகள் காட்டும் வீரட்டேசுவரர் கோயில்

# Veeratteswarar Temple showing the Chola Inscriptions

**முனைவர் செ. சாந்தி,** கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3
**Dr S. Santhi,** Guest Faculty, Department of History, Alagappa University, Karaikudi-3
ORCiD: https://orcid.org/0000-0001-6965-2478
VIDWAN.INFLIBNET: https://vidwan.inflibnet.ac.in/profile/201369
**DOI: 10.5281/zenodo.5802599**

## Abstract

*Tamil Nadu has marvellous temples which exist for more than many thousand years. It portrays the quality of art and architecture of the temples that have been existing for many ages. Every temple has its own chronicle and the dedication of the kings and people. Among the triumvirs of Tamil Nadu, the Cholas has contributed to temple arts and architecture. Many temples stand as testimony for their greatness. The Cholas also had inscribed many culverts for the temples they build. One such famous temple is Veeratteswarar Temple and its notable matters or recorded in the form of culverts. Hence, this article unfolds the facts from the culverts about the Veeratteswarar Temple.*

**Keywords:** Veeratteswarar Temple, Chola Inscriptions, Temple Studies

அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்றான, தேவாரப் பாடல்கள் பாடப்பெற்ற தலங்களுல் ஒன்றான வீரட்டேசுவரர் கோயில் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள சோழர்கால மன்னர்களில் முதலாம் குலோத்துங்கச் சோழனைத் தொடர்ந்து விக்கிரமச் சோழன், இரண்டாம் இராஜாதிராஜ சோழன், மூன்றாம் குலோத்துங்கச் சோழன், மூன்றாம் இராசராச சோழன் போன்ற மன்னர்களின் காலத்தில் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட அடிமைகள் இச்சோழர்களின் காலத்தில் பிரிக்கப்பட்ட வளநாடுகள் மற்றும் பிற்காலப் பாண்டியர்களின் கலவெட்டுகள், விஜயநகர மன்னர்களின் காலத்தில் உள்ள 98 இடங்கை மற்றும் 98 வலங்கை சாதியினரைப் பற்றியக் கல்வெட்டுத் தரவுகளைத் தொகுத்து காலத்தின் அடிப்படையில் இக்கோயிலின் வரலாறானது விளக்கப்பட்டுள்ளன.

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

தமிழகத்தின் வரலாற்றை இலக்கியம் மற்றும் தொல்பொருள் ஆய்வுச்சான்றுகளோடும், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மற்றும் எழுதிவைக்கப்பட்ட வரலாற்று ஆவணங்கள், வெளிநாட்டவரின் குறிப்புகள் போன்றவை வரலாற்றை எழுதுவதற்கு முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் பெருங்கற்காலச் சுவடுகள் தமிழகத் தொல்லியல் துறையினரால் கண்டறியப்பட்டுள்ளன. இதைப்போல ஆய்விற்குட்பட்டுள்ள குக்கிராமமான திருகுறுக்கை அமைந்துள்ள நாகப்பட்டின மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் தேரளந்தூர், பெருங்கடம்பூர், ஆக்கூர், கீழ்வேளூர், தில்லையாடி, வானகிரி மணிக்கிராமம், கீழ்ப்பெரும்பள்ளம், வீர்மேட்டிருப்பு போன்ற இடங்களில் பானைஓடுகள், தாழிகள், கல்திட்டை, கல்பதுக்கை, மண்குவை, கல்குவை, கல்வரிசை, தொப்புக்கல், குடைக்கல், தாழ்வரைகள் போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. (சந்திரமூர்த்தி.மா-2014) இவற்றுடன் பூம்புகார், தலச்செங்கோடு போன்ற இடங்களில் சங்ககாலப் பானை ஓடுகள், சுடுமண் பொம்மைகள், சுடுமண் சிற்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதுக் குறிப்பிடத்தக்கது. மேலும் சங்க காலத்தில் மக்கள் பயன்படுத்திய கருப்புநிற மட்பாண்டங்களைப் போலவே திருகுறுக்கை கோயில் களப்பணியின் போது கோயிலிருந்து சற்றுத் தொலைவில் மன்மதனை எரித்த இடமாகிய விபூதிகுட்டைக்குச் செல்லும் சாலையின் ஓரங்களில் மேற்புரத்திலையே கருப்புநிற மட்பாண்ட ஓடுகளும், சிவப்புநிற மட்பாண்ட ஓடுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இச்சான்றுகள் சங்ககால மக்கள் இப்பகுதியில் வாழ்ந்த்தற்கானச் சான்றுகளை எடுத்துரைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற கருப்புநிற மட்பாண்ட ஓடுகளின் கண்டுபிடிப்புகளை ஆவண இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து சங்ககால இலக்கியங்களில் மக்களின் வாழ்க்கைமுறை, ஆட்சிமுறை, சமூக வாழ்க்கை என வரலாற்றை தொகுக்கமுடிகின்றன. இதைப்போல தமிழகத்தில் களப்பிரரின் காலத்தை தொடர்ந்த

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

தொண்டை மண்டலத்தின் பல்லவரின் ஆட்சியும், தென்பாண்டிய மண்டலத்தில் முற்காலப் பாண்டியரின் ஆட்சியும் கி.பி.6ம் நூற்றாண்டு முதல் தொடங்கப்பட்டன.

பல்லவர்கள் மற்றும் முற்காலப் பாண்டியரின் காலக் குடைவரைகளின் கல்வெட்டுச் சான்றுகள் தமிழக வரலாற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தைத் தொடர்ந்து இக்கல்வெட்டுச் சான்றுகளைக் காணமுடிகின்றது. இதேக் காலக்கட்டத்தில் வளர்ச்சிப் பெற்ற பக்தி இலக்கியங்களின் வாயிலாக தேவாரப் பாடல்கள் பாடப்பெற்ற தலங்களின் மூலம் கிடைக்கப்பெறும் இலக்கியச் சான்றுகளை கொண்டும் சைவ, வைணவ சமய வளர்ச்சிகளை பற்றியும் அறியமுடிகின்றது. மேலும் சோழர் காலத்தைத் தொடர்ந்து கோயில்கள் கற்றளிகளாக தோற்றம் பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாமல் கோயில் எந்த மன்னரால் கட்டப்பட்டது என்பதற்கான கல்வெட்டுச் செய்திகளும் கோயில் கட்டுமானங்களில் அதிட்டானம், பித்தி, தூண் என பல இடங்களில் இக்கல்வெட்டுகளை காணமுடிகின்றது. இதைத் தொடர்ந்து விஜயநகர நாயக்க மன்னர்களும் இச்சான்றுகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். இக்காலக்கட்டடங்களில் கல்வெட்டுகளை போலவே செப்பேட்டுச் சான்றுகளும் அதிகமாக கண்டறியப்பட்டுள்ளன.

ஆய்விற்குட்பட்டுள்ள திருகுறுக்கை வீரட்டேசுவரர் கோயிலைப் பற்றி பக்திஇலக்கியச் சான்றுகளிலிருந்து திருநாவுக்கரசரால் தேவாரம் பாடப்பெற்ற சோழமண்டலக் கோயில்களில் திருக்குறுக்கை கோயிலும் ஒன்று என்பதையும் சோழர்களின் ஆட்சியில் முதலாம் இராசராச சோழனின் காலத்தில் பிரிக்கப்பட்ட வளநாடுகளையும் மண்டலங்களையும், வளநாடுகளின் உட்பிரிவுகளையும் சதுர்வேதி மங்கலங்களையும் ஒப்பிட்டு இக்கோயில் அமைந்துள்ள ஊரானது இச்சோழர் காலத்தில் விருதுராஜபயங்கர வளநாட்டின் உட்பிரிவான குறுக்கை நாடு என்றும், இக்குறுக்கை நாட்டில் நாராயண சதுர்வேதி மங்கலம், விக்கிரமச்சோழ சதுர்வேதி மங்கலம், ஜெயசிங்க குலகாலச் சதுர்வேதி மங்கலம், இராஜநாராயணச் சதுர்வேதி மங்கலம் போன்ற ஊர்களைப் பற்றியும் உய்யக்கொண்டான் வளநாட்டின்

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

உட்பிரிவான பெரவூர் நாட்டின் தானங்கள் பற்றிய தரவுகளின் அடிப்படையில் இக்கோயிலில் உள்ள முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராச சோழன், இரண்டாம் இராசாதிராச சோழன், மூன்றாம் குலோத்துங்கச் சோழன், விக்கிரமச் சோழன் போன்ற மன்னர்களைப் பற்றி குறிப்பிடும் இக்கோயிலின் கல்வெட்டுகளில் இருந்து தொகுக்கப்படும் சான்றுகளைக் கொண்டும் இச்சோழர்களின் காலத்தில் மக்களின் சமூக வாழ்க்கையோடு தொடர்பான இக்கோயிலுக்கு விற்கப்பட்ட அடிமைப் பெண்களைப் பற்றியும் சோழர்காலத்தை தொடர்நது விஜயநகர காலம் வரை வலங்கை, இடங்கை என்னும் சாதிப் பிரிவுகளைப் பற்றி குறிப்பிடும் இக்கோயிலின் கல்வெட்டுகளை தொடர்ந்து பின்வருமாறு சோழர்காலக் கல்வெட்டுகள் காட்டும் வீரட்டேசுவரர் கோயில் என்னும் தலைப்பில் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெற்றுள்ள தரவுகளின் அடிப்படையில் இக்கோயிலின் வரலாறை கீழ்க்கண்டவாறு தொகுக்கப்படுகின்றன.

**கோயிலின் அமைவிடம்**

திருக்குறுக்கை வீரடேசுவரர் கோயில் மேற்கு திசையை நோக்கிய கோயிலாக நாகப்பட்டினம், மயிலாடுதுறை வட்டத்தின் குக்கிராமமான திருகுறுக்கையில் காவிரியின் வடகறை தலங்களுள் 26-வது தலமாக அமையப்பெற்றுள்ளது. இவ்வூர் மாயிலாடுதுறை வட்டத்தில் இருந்து மணல்மேடு செல்லும் சாலையில் 12கி.மீ தொலைவிலும், நீடூர் மற்றும் கொண்டல் என்னும் ஊரிலிருந்து 3கி.மீ தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. மேலும் இக்கோயில் அமைந்துள்ள திருக்குறுக்கையின் எல்லைகளாக வடக்குப் புறத்தில் பட்டவர்த்தி எனும் கிராமமும், தெற்குப்புறத்தில் நீடூர் எனும் கிராமமும் கிழக்குப்புறத்தில் பாலக்குடி எனும் கிராமமும், மேற்குப் புறத்தில் ஐவநல்லூர் எனும் கிராமமும் இவ்வூரின் எல்லைகளாக அமையப்பெற்றுள்ளன. இவ்வூர் காவிரியின் வடகறையில் அமைந்துள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**அட்டவீரட்டத் தலம்**

திருக்குறுக்கை வீரடேசுவரர் கோயில் அட்டவீரட்ட தலங்களுள் ஒன்றாக

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

கருதப்படுகின்றது. அட்டவீரட்ட தலங்கள் என்பது இறைவனின் எண்குணங்களில் ஒன்றான முடிவிலாற்றலுடைமை என்னும் குணத்தை உணரும் வகையில் எட்டுவீரச் செயல்கள் நடந்ததாக கூறப்படும் தலங்கள் அட்டவீரட்ட தலங்கள் என அழைக்கப்படுகிறது. இவற்றுள் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐந்து தலங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு தலமும், தென்னார்க்காடு மாவட்டத்தில் இரண்டு தலங்களும் காணப்படுகின்றன. இக்கோயில் இறைவனின் பெயர் வீரட்டேசுவரர் என்றும், இறைவியின் பெயர் ஞானாம்பிகை என்றும் குறிப்பிடப்பெறுகின்றன.

**ஊர் பெயர்க்காரணம்**

தலப்புராணங்களின் அடிப்படையில் இவ்வூரைப் பற்றிய தரவுகளை சேகரிக்கும் பொழுது தீர்க்கவாகு முனிவர் இக்கோயிலின் இறைவனை அபிஷேகம் செய்வதற்காக தனது நீண்டக் கரங்களால் ஆகாய கங்கையின் நீரை எடுத்து வருவதற்கு கரங்களை நீட்டியபோது முனிவரின் நீண்டக் கரங்கள் குறுகியதால் குறுக்கை என்னும் பெயர்பெற்றுள்ளது. மேலும் இக்கோயில் இறைவனுக்கு வீரம் வந்த தலமாகவும் மற்றும் அட்டவீரட்ட தலங்களில் காமனை நெற்றிக்கண்விழியில் அழித்த தலமாகவும் குறிக்கப்படுகின்றது. இக்கோயிலில் தலவிருட்சமான கடுக்காய் மரம் காணப்படுவதால் கடுகவனம் என்றும் இறைவன் அம்பிகையை பிரிந்த தலமாதலின் யோகேஸபுரம் என்றும் இலக்குமியின் நடுக்கத்தை போக்கியதனால் கம்பகரபுரம் என்றும் காமதகனபுரம் என்றும் மன்மதனை மீண்டும் உயிர்ப்பித்ததால் ரதி அனுக்கிரகபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது.

சங்ககால இலக்கியங்களில் குறுக்கை என்றும் பக்தி இலக்கியங்களில் திருக்குறுக்கை என்றும் கல்வெட்டுகளில் விருதுராஜப்பயங்கர வளநாட்டில் காவிரியின் வடகரையின் உட்பிரிவான குறுக்கைநாடு என்றும் குறுக்கைநாட்டு கடலங்குடியான கங்கை கொண்டசோழ சதுர்வேதிமங்கலம் என்றும், குறுக்கை நாட்டினுள் ராஜநாராயண சதுர்வேதிமங்கலம், விக்கிரமச்சோழ சதுர்வேதிமங்கலம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. பிறஊர் கல்வெட்டுகளில் வடகறை குறுக்கைநாட்டு

திருவேல்விகுடி என்னும் செய்திகளும் காணக்கிடக்கின்றன. தற்போது இவ்வூர் திருக்குறுக்கையில் இருந்து பெயர்மருவி கொற்கை மற்றும் திருக்கொற்கை எனும் பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சோழப் பெருவேந்தரின் காலம் தமிழக வரலாற்றிலேயே பெருமையும், புகழும், வளர்ச்சியும் செறிந்தக் காலமாகும். இச்சோழர்கள் ஆண்ட ஏறத்தாழ 430 ஆண்டுக் காலத்தை (கி.பி.850 – 1280) தமிழக வரலாற்றின் பொற்காலம் எனறேக் கூறலாம். சங்ககாலத்திலும் ஆட்சி செய்த சோழர்கள் மீண்டும் கி.பி.850ல் ஆட்சியை கைப்பற்றி தென்னிந்தியா முழுவதுமே ஓரேயாட்சியினைக் கொண்டு தமிழகத்தை ஆட்சி செய்தது சோழப்பெருவேந்தர் காலமேயாகும். இக்காலத்தில் வாணிபம் கடல்கடந்துச் சிறந்தோங்கின. உள்நாட்டில் வேளாண்மையும் வாணிபமும் வளர்ச்சிப் பெற்றுக்காணப்பட்டன. சோழ மன்னர்கள் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களைப் புனைந்துக் கொண்டு ஆட்சி செய்தனர். முதலில் ஆட்சிசெய்யும் அரசனுக்கு இராசகேசரி என்றும், பின்வரும் அரசனுக்கு பரகேசரி என்றும் குறிப்பிடபெறுகின்றன. இதனைப் பற்றியச் சான்றுகள் சோழர்களின் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. இக்காலத்தில் கற்றளிகளான கோயில்கள் எங்கும் நிறைந்ததைப் போல கோயில்களின் கலைகளிலும் வடகிந்தியக் கலைப்பாணிகளான ஹொய்சாளர்களின் கலைப்பணி, சாளுக்கியர்களின் கலைப்பாணிகளும் புகுத்தப்பட்டுள்ளன என்பதை கோயில்களின் வேறுபட்ட கலைகளின் தாக்கத்தைக் கொண்டு வரலாற்றாசிரியர்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர்.

சோழர்களின் ஆட்சிக் காலத்தில் சோழ இராச்சியம் எட்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்துள்ளன. அவை இராசராசப் பாண்டிய மண்டலம், செயங்கொண்ட சோழ மண்டலம், மும்முடிச் சோழ மண்டலம், முடிகொண்டசோழ மண்டலம், நிகிரிலி சோழ மண்டலம், அதிராச சோழ மண்டலம், மலை மண்டலம், வேங்கை மண்டலம் எனவும் இம்மண்டலங்கள் வளநாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. வளநாடு என்ற

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

நிலப்பிரிவானது நிருவாக வசதிக்காக உருவாக்கப்பட்ட நிலப்பரப்பாக அமைந்துள்ளது. இவ்வளநாடுகள் ஆறுகளை எல்லைகளாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில் சோழமண்டலத்தில் ஒன்பது வளநாடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. அவை இராசேந்திரச்சிங்க வளநாடு, இராசாசிறிய வளநாடு, நித்தவினோத வளநாடு, உய்யக் கொண்டான் வளநாடு, ஷத்திரிய சிகாமணி வளநாடு, அருமொழிதேவ வளநாடு, இராசராச வளநாடு எனக் குறிப்பிடப்பெறுகின்றன.

இராசராசனைத் தொடர்ந்து வந்த சோழ மன்னர்களின் காலத்தில் இவ்வளநாடுகளின் பெயர்களை மாற்றி இயற்பெயர்களையும், விருதுப்பெயர்களையும் கொண்டு அமைந்துள்ளது. குறிப்பாக ஷத்திரிய சிகாமணி வளநாடு, முதலாம் குலோத்துங்கச் சோழனின் காலத்தில் குலோத்துங்கச்சோழ வளநாடு என்றும், காவிரியாற்றிற்கு வடக்கேயிருந்த இராசேந்திரசிங்க வளநாடு இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவற்றுள் மேற்கில் உள்ள பகுதி உலகுய்யவந்த சோழ வளநாடு என்றும், கிழக்கிலுள்ளப் பகுதி விருதுராசபயங்கர வளநாடு என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மன்னனுக்கு பின் இவனது மகன் விக்கிரமச்சோழனின் காலத்தில் உலகுய்யவந்தான் சோழ வளநாடு, விக்கிரமச்சோழ வளநாடு என்னும் பெயர் மாற்றம் பெற்றும் வந்துள்ளது.

வளநாடுகள் உட்பிரிவுகளின் அடிப்படையில் நாடுகளாகவும், கூற்றங்களாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் நல்லூர் நாடு, திருநறையூர் நாடு, இன்னம்பர் நாடு, திருவழுந்தூர் நாடு, திருவந்தளூர் நாடு. நாடுநாங்கூர் நாடு, ஆக்கூர், அம்பர் நாடு, மருகல் நாடுதிருக்கழுமல நாடு, திருவாலி நாடு, வெண்ணையூர் நாடு, குறுக்கை நாடு, நல்லாற்றூர் நாடு, மிழலை நாடு, உறையூர்க் கூற்றம், தஞ்சாவூர்க் கூற்றம், ஆவூர்க் கூற்றம், வெண்ணிக் கூற்றம், திருவாரூர்க் கூற்றம், பட்டினக் கூற்றம், வலிவலக் கூற்றம், ஆர்க்காட்டுக் கூற்றம் எனக் குறிப்பிடப்பெறுகின்றன.

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

இதனடிப்பைடயில் வளநாட்டின் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட நாடுகளும் கூற்றங்களும், பல சதுர்வேதி மங்கலங்களாகவும், சதுர்வேதி மங்கலங்கள் சிலச் சிற்றூர்களைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. சோழ நாட்டின் இவ்வளநாட்டுப் பிரிவுகளை நோக்கும் பொழுது முதலாம் ராசராசனின் (கி.பி.985-1014) காலத்திலும், முதலாம் குலோத்துங்கனின் (கி.பி.1070–1120) காலத்திலும் இந்நாட்டின் நிலச்சீர்த்திருத்தத் தாக்கங்களின் அடிப்படையிலே இவ்வளநாடுகள் பிரிக்கப்பட்டுள்ளன என Y.சுப்ராயலு தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். (Subbarayalu.Y 1973) மேலும் நாடுகளும் கூற்றங்களும் இக்காலத்தின் தாலுக்காக்கள் போன்றவை என்றும், வளநாடுகள் ஜில்லாக்களுக்கு ஒப்பானவை என்றும் மண்டலங்கள், மாகாணங்களுக்குச் சமமானவை என்றும் சதாசிவப்பண்டாரத்தார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சதாசிவப்பண்டாரத்தார் தி.வை.)

சோழர்காலத்தில் பிரிக்கப்பட்ட வளநாடுகளில் முதலாம் இராசஇராசச் சோழனின் காலத்தில் பிரிக்கப்பட்டு இராசேந்திரச்சிங்க வளநாடானது முதலாம்குலோத்துங்கச் சோழனின் காலத்தில் விருதுராசபயங்கர வளநாடு, உயகுய்யவந்த வளநாடு என பிரிக்கப்பட்டு பெயர் மாற்றம் பெற்றுள்ளது. (Subbarayalu.Y 1973) பிரிக்கப்பட்ட இவ்வளநாடுகளுள் காவிரியாற்றின் கிழக்கில் உள்ள விருதுராசபயங்கர வளநாட்டின் உட்பிரிவில் ஒன்றான குறுக்கை நாடானது ஆய்விற்குட்பட்டுள்ள திருக்குறுக்கை என்னும் ஊராகும். இவ்வளநாட்டில் குறுக்கை நாட்டோடு (ARE 1926-118), இன்னம்பர் நாடு (ARE 1907-292), கிலக்கா நாடு (ARE 1926-514), கூடல்நாடு (ARE 1927-296), மண்ணிநாடு (ARE 1916-237), நல்லூர் நாடு (ARE 1931-31), பருவூர் கூற்றம் (SI – VIII, No.212), விளத்துார் நாடு (ARE 1917-215), தொண்டை நாடு (ARE 1917-219) போன்ற பன்னிரண்டு நாடுகளாக கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெறுகின்றன. இவ்வளநாட்டில் மொத்த நாடுகளின் எண்ணிக்கை ஐந்தாகவும், இந்நாடுகளில் உள்ள ஊர்களின் எண்ணிக்கை 86வும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெறுகின்றன. ஆய்விற்குட்பட்டுள்ள குறுக்கைநாடு பதினைந்து ஊர்களை

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

உள்ளடக்கியதாக காணப்பட்டுள்ளது. குறுக்கை நாட்டில் பிரம்மதேய ஊர்களும் காணப்படுகின்றன.

அந்தணர்களுக்கு வழங்கப்படும் பிரம்மதேய குடியேற்றங்கள் அகரம், அக்ரஹாரம், அகப்பிரமதேயம், ஏகப்போக பிரமதேயம், மங்கலம், சதுர்வேதிமங்கலம், தேவதான பிரம்மதேயம் என்றப் பல பெயர்களில் இவ்வூர்களைப் பற்றி கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெறுகின்றன. கி.பி.9ம் நூற்றாண்டு முதல் கி.பி14ம் நூற்றாண்டு வரை சோழ நாட்டில் பரவலாக எல்லாப் பகுதிகளிலும் பிரம்மதேய ஊர்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்களிலும் கூட பிரம்மதேயமான சதுர்வேதி மங்கலம் எனும் குறிப்புகள் காணப்படுவதைக் காண்கின்றோம். இதனடிப்படையில் ஆய்விற்குட்பட்டுள்ள குறுக்கை நாட்டில் இராசநாராயன சதுர்வேதி மங்கலம் (ARE 1917-223) என்றும், விக்கிரமச்சோழ சதுர்வேதி மங்கலம் (ARE 1917-217), ஜெயசிங்ககுலகால சதுர்வேதி மங்கலம் (ARE, 1917 - 223) கிளிஞ்சாலூர் (ARE 1917-221), வகூர் (SII, Vol.II, No.66), பெரவூர் (SII, Vol. III,No-863) போன்ற ஊர்களைப் பற்றியச் செய்திகளையும் காணமுடிகின்றது. இக்கல்வெட்டுச் செய்திகளை பின்வருமாறு தொகுக்கப்படுகின்றன.

**கல்வெட்டுகள்**

**இராஜநாராயண சதுர்வேதிமங்கலம் தானம்**

வீரட்டேசுவரர் கோயில் மண்டபத்தின் முகப்பில் மேற்குப்புறச் சுவரின் மத்தியில் உள்ளக் கல்வெட்டில் குறிப்பிட்ட நிலங்களை முதலாம் குலோத்துங்கச்சோழ மன்னனின் காலத்தில் இராஜநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரில் இக்கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டச் செய்தியினையும், இப்பகுதி விருதுராஜபயங்கர வளநாட்டின் ஒரு பகுதியாகவும் இருந்துள்ளது எனவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. (ARE 1917 – 215) இக்கோயிலின் சண்டிகேசுவர சன்னிதியின் கிழக்கு, மேற்கு, வடக்குப்புறச் சுவரில் உள்ள பரகேசரிவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரமச்சோழ தேவாவின் (விக்கிரமச் சோழன்) காலக்

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

கல்வெட்டுகள் அழிந்த நிலையிலும், முற்றுப்பெறாத நிலையிலும் இக்கல்வெட்டுக் காணப்படுகின்றது என்பதை இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

**விக்கிரமச்சோழ சதுர்வேதி மங்கலத்தின் மலர்கள் தானம்**

வீரட்டேசுவரர் கோயிலில் மண்டபத்தின் வடக்குப்புறச் சுவரிலுள்ள திருபுவனசக்கரவர்த்தி ராஜாதிராஜ தேவனின் (இரண்டாம் ராசாதிராசன் (கி.பி.1173 – 1178) 6ம் ஆட்சியாண்டு கல்வெட்டானது மிதுன ராசியில் புனர்பூச சனிக்கிழமை அன்று இக்கோயிலுக்கு வரிநீக்கப்பட்ட நிலங்களும், விருதுராஜப்பயங்கர வளநாட்டின் உட்பிரிவிலுள்ள குறுக்கை நாட்டின் விக்கிரமச்சோழ சதுர்வேதி மங்கலத்திலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் ஒன்றுகூடி இக்கோயிலுக்கு பொருட்கள் வழங்கப்பட்டது மட்டும் அல்லாமல் இக்கிராமங்களில் பயிரிடப்படும் மலர்களை 50 வருடங்களாக தான்தான் உரிமையாளர் என்று சொல்லிக் கொள்ளாமல் பயிட்டவர் என்றப் பாகுபாடு அல்லாமல் இக்கோயிலுக்கு மலர்களை தானம் செய்ததோடு சிலப் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர் என்னும் செய்தியினை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக்கோயில் இறைவனின் பெயர் திருவீரட்டானமுடையார் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. (ARE 1917 – 224)

**நிலதானம்**

வீரட்டேசுவரர் கோயில் மண்டபத்தின் தெற்குப்புறச் சுவரிலுள்ள திரிபுவன சக்கரவர்த்தி ராஜாதிராஜனின் 13ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று திருவீரட்டானமும் உடையார் கோயிலுக்கு விருதுராஜபயங்கர வளநாட்டின் உட்பிரிவான குறுக்கை நாட்டிலிருந்து நிலம் தானமாக வழங்கப்பட்டச் செய்தியினைக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு அழிந்தநிலையில் காணப்படுகின்றது. (ARE 1917 – 222)

**அரையர் பெண்ணின் தானம்**

வீரட்டேசுவரர் கோயில் மண்டபத்தின் சுவரிலுள்ளக் கல்வெட்டில்

திரிபுவனச்சக்கரவர்த்தி ராசாதிராசதேவாவின் 13ம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு அரையர்களுல் உமையாள்வி என்னும் பெண் பெரிய அகப்பரிவரம் என்னும் தலைமையில் திருசாமூண்டீஸ்வரர் மற்றும் திருப்பள்ளியறை நாச்சியார் மற்றும் ஆட்கொண்ட நாயகதேவா போன்ற கோயில்களுக்கும், சன்னதிகளுக்கும் பனையூர் என்னும் ஊரைத் தேவதானமாகவும், கங்கைகொண்டச் சோழீஸ்வரமுடையார் கோயில் மற்றும் விருதுராசபயங்கர வளநாட்டின் உட்பிரிவான குறுக்கை நாட்டில் உள்ள கோயிலுக்கும் நெல்லைத் தானமாகவும், சிவபிராமணர்களுக்கு பணத்தையும் தானமாக இப்பெண்ணால் வழங்கப்பட்டச் செய்தியினைக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 228)

**விளக்கு மற்றும் நிலதானம்**

வீரட்டேசுவரர் கோயிலின் அதே மண்டபச் சுவரிலுள்ளக் கல்வெட்டானது திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழனின் (மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218) 11ம்ஆட்சியாண்டில் மகரராசியில் சப்தமி உத்திரட்டாதி நட்சத்திரத்தில் திங்கள் கிழமையன்று இக்கோயிலுக்கு ஐந்து முதல் ஏழு வருடங்களாக பலவிதமான சூழ்நிலைகளை கடந்து வாங்கப்பட்ட நிலங்களையும் இதனுடன் விளக்கையும் தானமாக வழங்கியச் செய்தியினைக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 226)

**வீடு தானம்**

வீரட்டேசுவரர் கோயிலின் அதே மண்டபச் சுவரிலுள்ளக் கல்வெட்டானது திரிபுவனசக்கரவர்த்தியின் குலோத்துங்கச்சோழனின் 26ம் ஆட்சியாண்டில் சிம்மராசியில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் திங்கள் கிழமையன்று இக்கோயிலுக்குக்காக ஒரு வீட்டை விற்று தானம் செய்த செய்தியினையும், இவ்வீடு கிணறு இணைக்கப்படாத வீடாதலாள் வாய்க்கால் மூலம் நீர்வரத்து ஏற்படுத்தி தானம் செய்யப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு முற்றுப்பெறாத நிலையில் காணப்படுகின்றது. (ARE 1917 – 227)

**திருவைகாசி திருநாளுக்கான தானம்**

வீரட்டேசுவரர் கோயிலின் மண்டபத்தின் தெற்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டானது திருபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழனின் 29ம் ஆட்சியாண்டில் இக்கோயிலில் உடைந்த பாகங்களைச் சரிசெய்வதற்காக செலவிடப்பட்ட தொகையினை பொறுப்பேற்பவர்கள் திருப்பள்ளியறை உதவியாளர்கள் எனவும், இத்திருப்பள்ளியறை திருநாவுக்கரசு குகை என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது. இக்கோயிலில் ஆதரவற்றவர்களுக்கு திருவைகாசி திருநாளன்று மகேஷ்வரர் என்பவரால் உணவு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், விக்கிரமச்சோழ சதுர்வேதி மங்கலத்தில் குறுக்கையில் உள்ள சிவனின் திருத்தாண்டகத்தை நினைவூட்டும் வகையில் ஒப்பிட்டு இந்நிகழ்ச்சியானது நடைபெற்றுள்ளது எனும் செய்தியினைக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 219)

**பணியாளர்கள் தானம்**

வீரட்டேசுவரர் கோயிலின் வடக்குப்புறச் சுவரிலுள்ள மண்டபக் கல்வெட்டொன்றில் விருதுராசப்பயங்கர வளநாட்டின் உட்பிரிவான குறுக்கை நாட்டில் உள்ள திருவீராட்டனேசுவரர் கோயிலின் பணியாளர்களைப் பற்றியும் இக்கோயிலுக்கு பெரியதேவர் ராசராசதேவா 19 வருடங்களாக இக்கோயிலுக்கு சூடம் எரிக்க 80 காசுகள் தானமாக வழங்கப்பட்டதை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 229)

**காசுகள் தானம்**

வீரட்டேசுவரர் கோயில் மண்டபச் சுவரிலுள்ள கல்வெட்டானது திருபுவனச்சக்கரவர்த்தியின் கடைசி ஆட்சியாண்டின் போது கோயிலுக்கு கடுவங்குடியைச் சேர்ந்த ஒரு பெண் நிலங்களையும், விளக்குகளையும் விலைக்கு வாங்கியதோடு 2000 காசுகள் தானமாக வழங்கப்பட்ட செய்தியினைக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 230)

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

**விளக்குகளுக்கான பணம் தானம்**

வீரட்டேசுவரர் கோயிலில் மண்டபத்தின் தெற்குப்புறச் சுவர் பகுதியிலுள்ளக் கல்வெட்டானது திரிபுவனச்சக்கரவர்த்தியின் மூன்றாம் ராஜராஜ சோழனின் 12ம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு ஐந்து விளக்குகளுக்கான பணம் தானமாக வழங்கப்பட்டச் செய்தியினை பதிவு செய்யப்பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பெற்றுள்ளன. (ARE 1917 – 220)

**பணம் தானம்**

வீரட்டேசுவரர் கோயிலின் அதே மண்டபச சுவரிலுள்ள கல்வெட்டில் திரிபுவனசக்கரவர்த்தி மூன்றாம் ராசராச சோழனின் 13ம் ஆட்சியாண்டில் கன்னி ராசியில் சுவாதி நட்சத்திரத்தில் வியாழக்கிழமையன்று குறுக்கையிலுள்ள திருவீராட்டானமுடைய நாயனார்க்கு பணம் தானமாக கொடுக்கப்பட்டச் செய்தியினைப் பதிவு செய்ததைப் பற்றியும், மேலும் குறுக்கை எனும் இவ்வூரை பெறவூர் நாட்டிலுள்ள கவனூரின் ஒரு பகுதியான குறுக்கை எனவும் இதனை உய்யக்கொண்டான் வளநாட்டின் உட்பிரிவு என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது. (ARE 1917 – 221)

**சதுர்வேதி மங்கல பிரம்மதேய தானங்கள்**

வீரட்டேசுவரர் கோயிலில் மண்டபத்தின் வடக்குப்புறச் சுவரிலுள்ளக் கல்வெட்டானது திருபுவனசக்கரவர்த்தி மூன்றாம் இராசராச சோழன் 19ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று திரிபுவனசக்கரவர்த்தி குலோத்துங்கச்சோழன் மற்றும் திரிபுவனசக்கரவர்த்தி ராஜாதிராஜ தேவனின் காலத்தில் இக்கோயிலுக்கு வகூர் என்னும் ஜெயசிங்ககுலகால சதுர்வேதி மங்கலத்திலிருந்தும், விருதுராஜபயங்கர வளநாட்டின் உட்பிரிவிலுள்ள குறுக்கை நாட்டின் ராஜநாராயண சதுர்வேதி மங்கலத்திலிருந்தும், விடையூர், நித்தியவினோத சதுர்வேதி மங்கலத்திலிருந்தும், ஜெயங்கொண்ட சோழவளநாட்டிலிருந்தும் சில வகையான பொருட்கள் தானமாக

வழங்கப்பட்டச் செய்தியினைப் பதிவு செய்ததாக இக்கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளன. (ARE 1917 – 223)

**சிவந்த பெருமாள் சந்தி**

வீரட்டேசுவரர் கோயிலின் வடக்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டொன்றில் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராச தேவாவின் கடைசி ஆட்சியாண்டில் சிவந்தப்பெருமாள் என்னும் காலிங்கராயன் குலோத்துங்கச் சோழ நல்லூரில் உள்ள நிலங்களையும் தானம் செய்து குறுக்கையில் விக்கிரமச்சோழ சதுர்வேதி மங்கலத்தையும் தானம் செய்ததோடு
சிவந்தபெருமாள் சந்தி ஒன்றையும் ஏற்படுத்தி தினமும் காலைப் பூசையினை நடத்துமாறுக் குறிப்பிடப்பெற்றுள்ளன. (ARE 1917 – 231)

**பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள்**

சோழர்களைத் தொடர்ந்துத் தமிழகத்தில் பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சியானது துவக்கம் பெறுகின்றது. மதுரையில் ஆட்சி புரிந்த பாண்டியர்களின் ஆட்சிப்பரப்பு சோழநாடு வரைக்கும் பரவியிருந்தது. பாண்டிய நாட்டிலுள்ளக் கோயில்களுக்கு தானம் செய்த்தைப் போல சோழநாட்டில் உள்ளக் கோயில்களுக்கும் பாண்டியர்கள் தானம் வழங்கியுள்ளனர் என்னும் வகையில் திருகுறுக்கை வீரட்டேசுவரர் கோயிலுக்கும் தானங்களை வழங்கியுள்ளனர். இவற்றுள் வீரபாண்டிய மன்னனின் தானச் செய்திகளையும், சோழர்களைப் போலவே பாண்டியர்களும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் சூட்டிக் கொண்டதையும் கல்வெட்டுக்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன.

**பணம் தானம்**

வீரட்டேசுவரர் கோயிலின் வடக்குப்புறச் சுவரிலுள்ளக் கல்வெட்டொன்றில் திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியத்தேவாவின் 32ம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு குறிப்பிட்டப் பணத்தையும், விளக்குகளையும் தானமாக வழங்கியச் செய்தியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 225)

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

**விடையூர் கிராமதானம்**

கருவறையின் வடக்குப்புறத்தில் உள்ள சண்டேசுவரர் கருவறையின் வடக்குப்புறச் சுவரிலுள்ளக் கல்வெட்டில் திரிபுவனச்சக்கரவர்த்தியின் திரிபுவன வீரபாண்டியத் தேவாவின் 38ம் ஆட்சியாண்டில் மகர சுதி ஏகாதசி ரோகினி நட்சத்திரத்தில் சனிக்கிழமையன்று நென்மலிக்கிழான், திருஏகம்பமுடையான், கண்டையபரான் போன்றோர் ஜெயங்கொண்டச்சோழ மண்டலத்தில் மானவில்கோட்டத்தின் உட்பிரிவான பழையானூர் நாட்டில் உள்ள விடையூர் கிராமத்தின் வரிநீக்கப்பட்ட நிலங்களை திருஞானசம்பந்தர் குகையின் முன்பு தீர்மானிக்கப்பட்டு இக்கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டச் செய்தியினைக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 233)

**விளக்கு தானம்**

கருவறையின் சுவரிலுள்ளக் கல்வெட்டில் திருபுவனச்சக்கரவர்த்தி திரிபுவன வீரபாண்டியத் தேவா தனதுக் கடைசி ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு விளக்குகளையும், நிலங்களையும் தானமாக வழங்கியச் செய்தியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. (ARE 1917 – 234)

**விஜயநகரப் பேரரசு கல்வெட்டுகள்**

விஜயநகர ஆட்சியில் சமுதாயத்தைப் பற்றி நோக்கும் போது நாட்டின் சமுதாய அமைப்பு சீர்கெட்டு இருந்த நிலையில் இவ்வாட்சியில் தமிழக மக்களின் அரசியல் சிக்கல்களையும் சமுதாயச் சீர்கேடுகளையும் தகர்தெறிந்தது. இவ்வாட்சியில் சமுதாயத்தில் மக்களால் பின்பற்றப்பட்ட சாதி முறைகளுள் பிராமணர்கள், கம்மாளர்கள், சௌராஷ்டிரர்கள், முஸ்லீம்கள், கைக்கோளர்கள், வலங்கை, இடங்கை போன்ற பல பிரிவுகள் இருந்துள்ளன. இவற்றுள் வலங்கை, இடங்கை எனும் பிரிவினர் சோழர்காலத்திலிருந்து விஜயநகரரின் காலம் வரை காணப்படுகின்றனர். விஜயநகரரின் காலத்தில் இப்பிரிவினர் 98 பிரிவுகளாக இருந்தனர் என்பதை அச்சுததேவராயரின் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவர்களுல் வணிகச்

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

சாதியினர், நெசவுத் தொழில் செய்யும் சாதியினர், இசைப் பாடகர்கள், பானை செய்வோர் போன்றோர் வலங்கையினராகவும், பலதரப்பட்ட தொழில்வல்லவர்கள், தோள் பதனிடுவோர் போன்றோர் இடங்கையினர் எனக் குறிப்பிடப்பெறுகின்றது. இப்பிரிவினர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டாலும் கோயில், பணிகளை ஒன்றாகவே இணைந்து மேற்கொண்டனர் என சேதுராமன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். (சேதுராமன் 2004) இதைப்போல ஆய்விற்குட்பட்டுள்ள திருகுறுக்கை வீரட்டேசுவரர் கோயிலில் வீரபிரதாப தேவமகாராயர், வீரபுக்கராயரின் மகன் இரண்டாம் ஹரிஹரர், வீர கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டுக்களில் 98 சாதியினர் வலங்கை பிரிவினரையும், 98 சாதியினர் இடங்கைப் பிரிவினரையும் குறிப்பிட்ட கல்வெட்டுச் செய்திகள் இக்கோயிலில் காணப்பெறுவது சிறப்புக்குரிய ஒன்றாகும் இதனைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப் பெறுகின்றன.

**வரிகளுக்கானத் தீர்மானச் செய்திகள்**

மண்டபத்தின் தெற்குப்புறச் சுவரில் உள்ள கல்வெட்டானது விஜயநகர மன்னர் வீரப்பிரதாப தேவராய மகாராயரின் காலத்தில் சௌவ்மிய கார்த்திகை பதினைந்தாம் நாள் இடங்கை 98 சாதியினரும், வலங்கை 98 சாதியினரும் ஒன்றுகூடி அதிகப்படியாகவும், நியாயத்திற்கு புறம்பாகவும் விதிக்கப்பட்ட வரிகளை எதிர்த்து குரலெழுப்பி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். (ARE 1917 – 216) இக்கல்வெட்டுச் செய்திகளை நோக்கும் போது இக்காலத்தில் வாழ்ந்த வலங்கை இடங்கை சாதி பிரிவினரைப் பற்றியும் இவ்விஜயநகரரின் காலத்தில் வரிகள் அதிகமாக விதிக்கப்பட்டதும் இவை இச்சாதிப்பிரிவினரால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதையும் அறியமுடிகின்றது. மேலும் இத்தீர்மானங்கள் விருதுராஜப்பயங்கர வளநாட்டின் உட்பிரிவான குறுக்கை நாட்டில் உள்ள வீரடடேசுவரர் கோயிலில் நடந்தேறியுள்ளது என்பதையும் அறியமுடிகின்றது. இக்கல்வெட்டுச் செய்தியானது தமிழகத்தில் விஜயநகர ஆட்சியின் சமுதாயம், பொருளாதாரத்தைப் பற்றி அறிந்துக் கொள்வதற்கு முக்கியச் சான்றாக அமைகின்றது.

### குலோத்துங்கச்சோழ கருப்பூரை விற்கப்பட்டச் செய்தி

மண்டபச் சுவரிலுள்ளக் கல்வெட்டானது வீரபுக்கராயரின் மகன் வீரஹரிராயாவின் காலத்தில் குலோத்துங்கச் சோழக் கருப்பூரை குறுக்கை நாட்டில் கிளிஞ்சாலூரில் உள்ள செல்லப்பிள்ளை என்கிற செம்பியன் கோனாரின் தலைமையில் திருவம்பலமுடையான் தொண்டைமானாருக்கு விற்கப்பட்டச் செய்தியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும் விருதுராஜப்பயங்கர வளநாட்டின் உட்பிரிவினை குறுக்கை நாட்டின் திருவீரட்டானமுடைய நாயனார் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. (ARE 1917 – 217)

### வரிகள் தானம்

கருவறையின் தெற்குப்புறத்தில் கிழக்கு நோக்கியவாறு காணப்படும் விநாயகர் கருவறையின் வடக்குப்புறச் சுவரிலுள்ளக் கல்வெட்டில் விஜயநகர மன்னன் வீரபிரதாப மகாராய வீரக்கிருஷ்ணதேவராயரின் 1409ஆம் ஆட்சியாண்டில் ஈஸ்வர புஷ்ய சுதி பூர்ணமி நட்சத்திரத்தில் சோழ மண்டலத்தில் உள்ள சிவன் மற்றும் விஷ்ணு கோயில்களுக்கு வரிநீக்கப்பட்டச் செய்தியினையும் குறிப்பிடுகிறதே தவிர வேறெந்தச் செய்தியும் குறிப்பிடப்பெறவில்லை. மேலும் இக்கல்வெட்டு முற்றப்பெறாத நிலையில் காணப்படுகின்றது. (ARE 1917 – 235)

### முடிவுரை

சங்ககாலத்தில் மக்களால் பயன்படுத்தப்பட்ட கருப்புநிறப் பானை ஓடுகள் களப்பணியின் போது இக்குறுக்கையிலும் கிடைக்கப்பெற்றது முக்கியத்துவம் பெற்றச் சான்றாக அமைகின்றது. சங்க காலத்தைத் தொடர்ந்து கி.பி6ம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தில் சைவ சமயத்தின் வளர்ச்சியில் திருநாவுக்கரசரால் தேவாரப் பாடல்கள் பாடப்பெற்ற தலங்களுல் ஒன்றாக திருக்குறுக்கையும் குறிப்பிடப்பெற்றுள்ளது. இப்பக்தி இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது திருநாவுக்கரசரின் காலத்திலிருந்தே இத்தலம் இருந்திருக்கக்கூடும் பின்னர் சோழர்களின் காலத்தல் இக்கோயில் முழுவதும் தகர்த்தப்பட்டு இச்சோழர்களின் கலைப்பாணியில்

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

கட்டப்பட்டிருக்கலாம் என்பது கட்டுரையின் கருத்தாக அமைகின்றது. மேலும் இக்கோயிலின் கல்வெட்டுச் செய்திகள் தமிழக வரலாற்றிற்க்கு ஒரு முக்கியத்துவம் பெற்றச் சான்றாக அமைகின்றது.

**நூற்பட்டியல்**

[1] A Topographical list of inscriptions in Tamilnadu and Kerala States. Vol. II, T.V. Mahalingam, (ed.), Indian Council of Historical Research, New Delhi, 1988.
[2] Annual Report of Epigraphy, Archaeological Survey of India, New Delhi. 1907-292, 1916- 237, 1917, 215-235, 1926-118, 1926-514, 1927-296, 1931-31).
[3] South Indian Inscription (SII, Vol.II, No.66), (SI – VIII, No.212, 863).
[4] Balasubramanyam.S.R., Later Chola Temples, Mudgala Trust, Faridabad, 1979.
[5] Balasubramanyam. S.R., Middle Chola Temples, Oriental Press, Amsterdam, 1977.
[6] Balasubramanyam.S.R., Early Chola Temples, Oriental Longman, Chennai, 1971.
[7] Chopra, P.N., T.K. Ravindran, History of South India Vol. II Medieval Period. S.Chand Company Ltd., New Delhi, 2001.
[8] Nilakanda Sastri, K.A., A History of South India**,** Oxford University, Chennai, 1971.
[9] Nilakanda Sastri, K.A., The Cholas, University of Madras, Chennai, 1975.
[10] Subbarayalu.Y., Political Geography of the Chola Country, The state Department of Archaeology, Govt. of Tamilnadu, 1973.
[11] Subramaniyan, N., History of Tamilnadu, Madurai, 1981.
[12] Subramaniyan,N. Sangam Polity, Madurai, 1966.
[13] இராமன், கே.வி., (1977) பாண்டியர்வரலாறு, தமிழ்நாடு அரசு, சென்னை.
[14] இராசமாணிக்கனார்.முர்.(1999) சோழர் சரிதம், பூரம் பதிப்பகம், சென்னை.
[15] கோபிநாதவ்.து(1944) சோழவம்ச சரித்திரச் சருக்கம், தங்சுர்வூர்.
[16] சதாசிவப்பண்டாரத்தார்.தி.வை.(1974) பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைகழகம், சிதம்பரம்.
[17] சதாசிவப்பண்டாரத்தார்.தி.வை,(2001) பாண்டியர் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2001.
[18] சதாசிவப்பண்டாரத்தார்.தி.வை(1941) முதற்குலோத்துங்க சோழன், சென்னை .

Volume 1, Issue 2, May 2021 E-ISSN: 2583-0880

[19] சந்திரமூர்த்தி.மா.(2014) நாகப்பட்டினம் மாவட்டத் தடயங்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை

[20] சிங்காரவேல்.அ.(2007) தமிழகத்தில் விஜயநகர ஆட்சி (கி.பி.1336-1530) சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

[21] சீனிவாசன்.கே.ஆர்.,(1966) தென்னிந்தியக் கோயில்கள், நேஸனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியா, புதுடில்லி.

[22] சுப்பராயலு.ஒய்.(2006) தமிழ் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

[23] சேதுப்பிள்ளை ரா.பி., (1940) தமிழக ஊரும் பேரும், சென்னை.

[24] சோமசுந்தரம்பிள்ளை ஜே.எம்,(1950) சோழர் கோயிற் பணிகள், ஆசிரியர் நூற்பதிப்பகம், சென்னை

## References

[1] A Topographical list of inscriptions in Tamilnadu and Kerala States. Vol. II, T.V. Mahalingam, (ed.), Indian Council of Historical Research, New Delhi, 1988.

[2] Annual Report of Epigraphy, Archaeological Survey of India, New Delhi. 1907-292, 1916-237, 1917, 215-235, 1926-118, 1926-514, 1927-296, 1931-31).

[3] South Indian Inscription (SII, Vol.II, No.66), (SI – VIII, No.212, 863).

[4] Balasubramanyam.S.R., Later Chola Temples, Mudgala Trust, Faridabad, 1979.

[5] Balasubramanyam. S.R., Middle Chola Temples, Oriental Press, Amsterdam, 1977.

[6] Balasubramanyam.S.R., Early Chola Temples, Oriental Longman, Chennai, 1971.

[7] Chopra, P.N., T.K. Ravindran, History of South India Vol. II Medieval Period. S.Chand Company Ltd., New Delhi, 2001.

[8] Nilakanda Sastri, K.A., A History of South India**,** Oxford University, Chennai, 1971.

[9] Nilakanda Sastri, K.A., The Cholas, University of Madras, Chennai, 1975.

[10] Subbarayalu.Y., Political Geography of the Chola Country, The state Department of Archaeology, Govt. of Tamilnadu, 1973.

[11] Subramaniyan, N., History of Tamilnadu, Madurai, 1981.

[12] Subramaniyan, N. Sangam Polity, Madurai, 1966.

[13] Raman.K.V (1977), Pandiyar Varalaru, Tamilnadu Arasu, Chennai.

[14] Rasamanikanar.M., (1999) Cholar Saritham, Pooram Pathipagam, Chennai.
[15] Gopinatharao.T (1944), Chola Vamsa Sarithirach Sarukkam, Thanjavur
[16] Sathasivabandaratthar.T.V., (1974), Pirkala Cholar Varalaru, Annamalai University, Chithambaram.
[17] Sathasivabandaratthar.T.V., (2001) Pandiyar Varalaru, Manivasagar Pathipagam, Chennai.
[18] Sathasivabandaratthar.T.V., (1941) Muthalamkulothunga Cholan, Chennai.
[19] Santhiramadhi.M., (2014) Nagappattinam Mavattath Thadayangal, manivasagar Pathippagam, Chennai.
[20] Singaravel.A (2007), Tamilagatthil Vijayanagara Attchi.(1336A.D-1530 AD). Chennai.
[21] Srinivasan K.R. (1966), Thenninthiya Koyilkal, National Book Trust, New Delhi.
[22] Suprayalu.Y (2006), Tamil Kalvettiyalum Varalarum, Tamil University, Tanjavur.
[23] Sethuppillai.R.P., (1940) Tamilaga Urum Perum, Chennai.
[24] Somasudarampillai.J.M., (1950), Cholar Koyil Panigal, Aseriyar Noorpathipagam, Chennai.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி** /Author Contribution Statement: இல்லை /NIL

**கட்டுரையாளர் நன்றியுரை** /Author Acknowledgement**:** இல்லை **/Nil**

**கட்டுரையாளர் உறுதிமொழி** /Author Declaration**:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.